**சுருக்கம்**

சிறுபான்மையினர் நலன் – 2022–2023–ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டு உரை அறிவிப்பு – தொன்மையான தேவாலயங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் – செயற்படுத்துதல் – வழிமுறைகள் – வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்**
**சிறுபான்மையினர் நலத் (சிநஆபி1) துறை**

அரசாணை (நிலை) எண்.73

நாள் 29.09.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது, புரட்டாசி 12

படிக்க:–

1) அரசாணை (நிலை) எண்.20, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 30.03.2023.
2) அரசாணை (நிலை) எண்.26, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 26.04.2023.
3) சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண். அ4/2362/ 2021, நாள் 04.07.2023 மற்றும் 05.09.2023.

*******

**ஆணை:–**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் 2022–2023–ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டு உரையில் அறிவிக்கப்பட்டவாறு, சென்னையில் உள்ள வெஸ்லி தேவாலயம், புனித தோமையார் மலை தேவாலயம், திருநெல்வேலியில் உள்ள கால்டுவெல் தேவாலயம் மற்றும் நாகர்கோவிலில் உள்ள தூய சேவியர் தேவாலயம் ஆகிய தொன்மையான தேவாலயங்களைப் புனரமைப்பதற்காக பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் ரூ.6/– கோடி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலும், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் 2023–2024–ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டு உரையில் அறிவிக்கப்பட்டவாறு, மதுரை புனித ஜார்ஜ் தேவாலயம், தஞ்சாவூர் ஸ்வார்ட்ஸ் தேவாலயம் மற்றும சேலம் கிறிஸ்து தேவாலயம் உள்ளிட்ட தொன்மையான தேவாலயங்களை ரூ.10 கோடி செலவில் புனரமைப்பதற்காக பார்வை இரண்டில் காணும் அரசாணையில் நிருவாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. இந்நிலையில், மேற்படி தொன்மையான தேவாலயங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் திட்டத்திற்கான வழிமுறைகள் வகுத்து ஆணையிடுமாறு பார்வை மூன்றில் காணும் கடிதத்தில் கோரப்பட்டது.

4. பார்வை மூன்றில் காணும் கடிதத்தில் பெறப்பட்ட சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கருத்துருவை, அரசு நன்கு ஆய்வு செய்து, தொன்மையான தேவாலயங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் திட்டத்திற்கான வழிமுறைகளை பின்வருமாறு வகுத்து ஆணையிடுகிறது:-

(i) பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்டவாறு, சென்னையில் உள்ள வெஸ்லி தேவாலயம், புனித தோமையார் மலை தேவாலயம், திருநெல்வேலியில் உள்ள கால்டுவெல் தேவாலயம் மற்றும் நாகர்கோவிலில் உள்ள தூய சேவியர் தேவாலயம் ஆகிய தொன்மையான தேவாலயங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைப்பதற்கு கீழ்க்காணுமாறு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு வாயிலாக செயற்படுத்தப்படும்:-

| | | | |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சித் தலைவர் | - | தலைவர் |
| 2 | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் / மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் | - | உறுப்பினர் |
| 3 | தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலகம் / நகர பஞ்சாயத்து / நகராட்சி / மாநகராட்சி பொறியாளர் | - | உறுப்பினர் |
| 4 | தொடர்புடைய வட்டாட்சியர் | - | உறுப்பினர் |

(ii) அத்துடன், மேற்படி தேவாலயங்கள் மற்றும் நினைவில்லத்தில் பணிதுவக்கப்பட்டு பணி முன்னேற்றத்தை மேற்குறிப்பிட்ட குழு வாயிலாக ஆய்வு செய்து அறிக்கை அனுப்பவும் முதல் தவணை தொகையாக மொத்த தொகையில் 50% விடுவிக்கவும் எஞ்சிய தொகையை பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு மூன்று மாதத்திற்குள் நிறைவறிக்கை பெற்ற பிறகு விடுவிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(iii) இதற்கென மாவட்டத்தில் ஏற்கனவே துவக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் வங்கி கணக்கில் தொகையை வரவு வைத்து மாவட்ட ஆட்சியர் வாயிலாக சம்பந்தப்பட்ட தேவாலயம்/நினைவில்லத்திற்கு தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(iv) கீழ்குறிப்பிட்டுள்ளவாறான மதிப்பீட்டில் சம்பந்தப்பட்ட தேவாலயங்கள் மற்றும் நினைவில்லத்திற்கு தொகை ஒப்பளித்து வழங்க சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது:-

| வ. எண் | தேவாலயத்தின் பெயர் | ஒப்பளிக்கக் கோரும் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Wesley Church, St. Thomas Mount, Chennai District | 1,18,79,734/- |
| 2 | Caldwell Parsonage, Tirunelveli District | 1,03,09,950/- |
| 3 | St. Xavier's Church, Nagercoil, Kanniyakumari District | 2,28,83,816/- |
| 4 | St. Thomas Mount National Shrine, St. Thomas Mount, Guindy, Chennai District | 1,49,26,500/- |
| | மொத்தம் | 6,00,00,000/- |

(v) மேற்படி திட்டம் தொடர்பாக, திட்டம் நிறைவுறும் வரை, ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறு சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரீட்டா ஹரீஷ் தக்கர்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-5.
மாவட்ட ஆட்சியர்,
சென்னை, திருநெல்வேலி, கன்னியாகுமரி.
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
சென்னை, திருநெல்வேலி, கன்னியாகுமரி.
மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர்,
சென்னை, திருநெல்வேலி.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
மாநில கணக்காயர், சென்னை-18.
நகல்:
நிதி (பி, மிபி(ம) சிந) துறை, சென்னை-9.
அரசு செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்